தமிழ்நாடு அரசு

# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

## வட்டாட்சியர் அலுவலகம், தென்காசி, தென்காசி மாவட்டம்.

அறிவிக்கை எண் 2236/2025–A2(02/2025) நாள் –08.10.2025

தென்காசி மாவட்டம் தென்காசி வட்டத்தில் காலியாகவுள்ள கிராம உதவியாளர் காலிப் பணியிடங்கள் நேரடி நியமனம் செய்வதற்கான இவ்வலுவலக அறிவிக்கை எண்.2236/2025.A2, நாள்–11.07.2025–ன்படி விண்ணப்பங்கள் பெறப்பட்டு வாசித்தல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு பணி 17.09.25 முதல் 19.09.25 வரை நடைபெற்றது. இந்நிலையில் தற்போது சென்னை கூடுதல் தலைமை செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண். ந.க.வ.நி.2(2)/02/28–01–2024, நாள்.22.09.25–ன்படி கிராம உதவியாளர் பதவிக்கான உச்ச வயது வரம்பு உயர்த்தி கடிதம் வரப்பெற்றுள்ளதன்பேரில் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. (குறிப்பு: இவ்வலுவலக அறிவிக்கை எண் 2236/2025 A2 ,நாள்–11.07.2025 ன்படி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள மற்றும் வாசித்தல், சான்றிதழ் சரிபார்ப்பிற்கு வருகை தந்த விண்ணப்பதாரர்கள் தற்போது விண்ணப்பிக்க தேவையில்லை.) விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப படிவங்களை https://tenkasi.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். கீழ்க்காணும் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் பூர்த்தி செய்து 10.10.2025 முதல் 24.10.2025 மாலை 05.45 மணிக்குள் தென்காசி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் கிடைக்கப்பெறும் வகையில் விண்ணப்பம் செய்ய வேண்டும். நேரம் கடந்து வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது. ஒரு நபர் ஒரு கிராமத்திற்கு மட்டும் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

| | |
|---|---|
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் Level 06 (ரூ.11,100–ரூ.35,100) |
| வட்டத்தின் பெயர் | தென்காசி |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | 02 |

**2. இன சுழற்சி விவரம்**

| வ. எண் | கிராமம் மற்றும் எண் | இன சுழற்சி | வகுப்பு | முன்னுரிமை / முன்னுரிமை அற்றவர் | பொது ஆண் / பெண் | விதவை/முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளி/ தமிழ்வழிக்கல்வி |
|---|---|---|---|---|---|---|
| 01 | மேலப்பாவூர் (16) | 26 | ஆதிதிராவிடர் (SC) | முன்னுரிமை அற்றவர் | பெண் | தமிழ்வழிக் கல்வி (PSTM) |
| 02 | திப்பணம்பட்டி (19) | 27 | பொது பிரிவினர்(GT) | முன்னுரிமை அற்றவர் | பொது | – |

**3. வயது 01.07.2025 தேதிப்படி வயது கணக்கிடப்படும்.**

| வ. எண் | பிரிவு | குறைந்தபட்ச வயது வரம்பு | அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1 | பொதுப் பிரிவினர் | 21 | 32 |
| 2 | பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட/ சீர்மரபினர் | 21 | 39 |
| 3 | பட்டியலினத்தவர்/பழங்குடியினர்(ம) ஆதரவற்ற விதவை | 21 | 42 |

முன்னாள் இராணுவ பொதுப் பிரிவினருக்கு அதிகபட்சம் 50 வயதும், இதரப் பிரிவினருக்கு (BC/BC(M)/MBC/DNC/SC/SCA/ST) 55 வயதும் வழங்கபடும்.

மாற்றுத்திறனாளிகளின் அதிகபட்ச வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்ட வயதிலிருந்து 10 ஆண்டுகள் வயது தளர்வு (Tamil Nadu Govt Servants (Conditions of Service ) Act–2016)

**4. இதர தகுதிகள் /நிபந்தனைகள்**

இவ்வலுவலக அறிவிக்கை எண்2236/2025–A2 நாள் 11.07.2025 இல் குறிப்பிட்டுள்ள தகுதிகள் மற்றும் நிபந்தனைகள்.

**வருவாய் வட்டாட்சியர்**
**தென்காசி.**